# *நற்றிணையில் அற விழுமியங்கள்*

***ஷா. முஹம்மது அஸ்ரின் & த.செல்வராசு*** / S. Muhammad **Asri** & T. Selvarasu
*முதுகலை & தமிழாய்வுத்துறை* / Master & Tamil Department
*ஜமால் முகமது கல்லூரி* (*த*) / Jamal Muhammad College
*திருச்சிராப்பள்ளி* / Tiruchy

Manuscript received 21 June 2025
Manuscript accepted September 2025
*Corresponding author/First Author

***ஆய்வுச் சுருக்கம்***

*ஒவ்வொரு சமூகத்திலும் வாழ்ந்து மறைந்த முன்னோர்களின் நற்செயல்களும், நற்சிந்தனைகளும் காலங்கள் பல கடந்து நிலைபெற்றுவிடுகின்றன. அவ்வாறு நிலைபெற்றவைப் பிற்காலத்தில் தோன்றும் மக்களால் போற்றிப் பின்பற்றப்படுகின்றன. பழந்தமிழகத்தில் வாழ்ந்த மக்களின் சொல்லிலும், செயலிலும், சிந்தனையிலும் எண்ணற்ற விழுமியங்கள் கருத்துகளாகவும், அறிவுரைகளாகவும் இடம்பெற்றுள்ளதைச் சங்க இலக்கியங்களைக் கொண்டு அறியமுடிகின்றது. ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சங்க இலக்கிய நூல்களுள் ஒன்றான நற்றிணையில் நீரின் முக்கியத்துவம், இளமையின் இன்றியமையாமை, தீமையைத் தவிர்த்தல், விடாமுயற்சி செய்தல், மனிதநேயத்துடன் நடத்தல், வாய்மையைக் கடைபிடித்தல், பங்கிட்டு உண்ணுதல் ஆகிய அறம் சார்ந்த கருத்துகளும், சிந்தனைகளும், அறிவுரைகளும் விழுமியங்களாக இடம்பெற்றுள்ளதைக் காண முடிகின்றது. இவ்விழுமியங்களைக் கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், அறிஞர்களின் கூற்றுகள் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு விரிவான முறையில் விளக்கமாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.*

***திறவுச் சொற்கள்***: *நற்றிணை, விழுமியம், அறம், இளமையின் முக்கியத்துவம், தீமையைத் தவிர்த்தல், விடாமுயற்சி, மனிதநேயம், வாய்மை, பாதீடு*

**Abstract**

*The good deeds and noble thoughts of ancestors who lived and passed away in every society endure through many ages. Those that have thus endured are revered and followed by people who emerge in later times. Through Sangam literature, we can learn that countless values are embedded as ideas and advice in the words, actions, and thoughts of the people who lived in ancient Tamil Nadu. In Natrinai, one of the Sangam literary texts taken up for study, we can see that ethical concepts, thoughts, and advice appear as values, including: the importance of water, the indispensability of youth, avoiding evil, persevering with effort, treating others with humanity, adhering to truthfulness, and sharing food. The objective of this article is to examine these values in detail and comprehensively, with the aid of encyclopedias, dictionaries, and the statements of scholars.*

**Keywords:**
Nattrinai, Values, Moral, Importance of Youth, Avoidance of Evil, Hardwork, Humanity, Honesty, Food Sharing

## முன்னுரை

அன்றாட வாழ்வில் மனிதனால் செய்யப்படும் நற்செயல்கள் வாயிலாகச் சீரிய பண்புகள் வெளிப்படுகின்றன. அப்பண்புகளே அவனது வாழ்வில் முன்மாதிரியாக அமைந்து **'விழுமியம்'** என்ற பெயரில் நிலைபெற்று விடுகின்றன. பழந்தமிழ் மக்களின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடியாகச் சங்க இலக்கியப் பாடல்கள் திகழ்கின்றன. பல்வேறு சூழ்நிலைகளைக் களமாகக் கொண்டு பல்வேறு புலவர்களால் பாடப்பட்டுள்ள அப்பாடல்களில் பழந்தமிழ் மக்களின் எண்ணற்ற விழுமியங்கள் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. அவற்றுள் இளமை, தீமை, விடாமுயற்சி, மனிதநேயம், வாய்மை, உணவுப் பங்கீடு ஆகியன குறித்து நற்றிணையில் இடம்பெற்றுள்ள அறம் சார்ந்த விழுமியங்களைப் பகுத்தாராய்ந்து வெளிப்படுத்திட இக்கட்டுரை முனைகிறது.

## விழுமியம் - விளக்கம்

'விழு' எனும் வேர்ச்சொல்லை அடியாகக் கொண்டு தோன்றிய சொல் 'விழுமியம்' ஆகும். 'விழு' என்ற சொல்லிற்குச் 'சிறப்பு' எனப் பொருள்படும். 'விழுமியம்' என்பதற்குக் கலைக்களஞ்சியத்தில் 'சிறப்புடையேம்' (தமிழ் லெக்சிகன், பகுதி 1, ப.3723) எனப் பொருள் கூறப்பட்டுள்ளது. மேலும், மதுரைத் தமிழ்ப் பேரகராதியில் 'விழுமிய' என்பதற்குச் 'சீரிய பொருளை உணர்த்துதல்' (மதுரைத் தமிழ்ப் பேரகராதி, ப.849) எனும் பொருள் காணப்படுகிறது. மேலும், இச்சொல்லிற்கு 'சிறந்த' (திருமகள் தமிழ் அகராதி, ப.856) எனும் பொருள் திருமகள் தமிழ் அகராதியில் காணக் கிடைக்கின்றது.

"விழுமியம் என்றாலே சிறந்ததை மட்டுமே குறிக்கும். சிறந்ததல்லாத எதுவும் விழுமியம் என்ற சொல்லின் பொருளாட்சிக்குள் வராது" (சேதுமணியன், தமிழ் நாவல்களில் மதிப்புகள், ப.1) என்கிறார் சேதுமணியன். மேன்மை, தகுதி, தகவு, மாண்பு, மாட்சிமை, மகிமை, உயர்வு, மதிப்பு ஆகிய சொற்களும் சிறந்ததைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. எனவே, இச்சொற்கள் அனைத்தையும் குறிக்க விழுமியம்' எனும் பொதுச்சொல்லைக் கல்வியாளர்கள் பயன்படுத்துகின்றனர்.

ஆங்கில மொழியில் விழுமியத்தையும் மதிப்புகளையும் குறிக்க **'Values'** எனும் சொல் பயன்படுத்தப்படுகின்றது. இச்சொல்லைப் பக்தவத்சல பாரதி, அ.ச.ஞானசம்பந்தன், ம.ரா.போ.குருசாமி ஆகியோர் **'விழுமியம்'** என்றே தமிழில் மொழிபெயர்த்துள்ளனர். எனினும் விழுமியமும் மதிப்பும் வேறு பொருள் கொண்டவை எனும் கருத்துடையவராக சேதுமணியன் விளங்குகிறார்.

## அற விழுமியங்கள்

சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள 'அறம்' எனும் சொல்லை ஆங்கில மொழியில் 'Ethics' என்பர். அறம் எனும் கருத்தாக்கமானது தொடக்க காலம் முதல் இக்கால வரை மனிதனின் வாழ்க்கை நிகழ்வுகளோடு பின்னிப் பிணைந்துள்ளது. இதனை மெய்ப்பிக்கும் வகையில் பழந்தமிழ் இலக்கியங்களில் பல்வேறு அறக் கருத்துகள் இடம்பெற்றுள்ளதைக் காணலாகிறது. இக்கருத்துகளே, சங்க கால சமுதாயத்தின் வரலாறு, கலாச்சாரம், நாகரிகம், பண்பாடு ஆகியவற்றை அறிய உதவுகின்றன.

> "அந்நிலை மருங்கின் அறமுத லாகிய
> மும்முதற் பொருட்கும் உரிய என்ப" (தொல், நூ.1358)

எனும் தொல்காப்பிய நூற்பாவில் அறம், பொருள், இன்பம் எனும் முப்பொருட்களின் வரிசை முறையை குறிப்பிடுகையில் அறத்திற்கு முதன்மை கொடுக்கப்பட்டுள்ளதைக் காணலாகிறது. மேலும், இம்முப்பொருளுக்கும் அறமே அடித்தளமாக விளங்குகிறது என்பதை,

> ''இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
> அன்பொடு புணர்ந்த ஐந்திணை
> சிறப்புடை மரபிற பொருளும் இன்பமும்
> அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல'' (தொல், நூ.1035)

எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளதையும் காண முடிகிறது.

அறம் என்பது ''கடமை, நோன்பு, தருமம், கற்பு, இல்லறம், துறவறம், நல்வினை, அறநூல், அறக் கடவுள், தரும தேவதை'' (கழகப்புலவர் குழு, கழகத் தமிழ் அகராதி, ப.59) ஆகியவற்றைக் குறிப்பிடுவதாகக் கழகத் தமிழ் அகராதியில் கூறப்பட்டுள்ளது. மேலும், இச்சொல்லானது சங்க இலக்கியங்களில் எத்தகைய பொருள்களில் புலவர்கள் பாடியுள்ளனர் என்பதைப் பாலதண்டாயுதத்தின் கூற்றால் அறியலாகிறது.

“ஒழுக்கம், வழக்கம், நீதி, கடமை, ஈகை, புண்ணியம் அறக்கடவுள், சமயம் என்ற பொருள்களைப் பெருவழக்காக வழங்கியதோடு, வேறு சில பொருள்களும் அருகிய வழக்காக வழங்கியுள்ளனர்” (பாலதண்டாயுதம்.க, சங்க இலக்கியத்தில் அறங்கள், ப.9) என்கிறார். இவை சங்க கால மக்கள் அறச் சிந்தனைகளையும், அறக் கருத்துகளையும் அடிப்படையாகக் கொண்டே செயல்களைச் செய்துள்ளதை மெய்ப்பிக்கின்றன.

> ''மறம்கெழு சோழர் உறந்தை அவையத்து
> அறம் கெட அறிய தாங்கு'' (நற்றிணை, ப.400: 7-8)

என்பதைக் கொண்டு அன்றைய ஆட்சியாளர்களின் அறமாக நீதி தவறாமை விளங்கியுள்ளதை அறிய முடிகின்றது. மேலும், மனித இனத்திடம் இயற்கையிலேயே அறப் பண்புகள் நிறைந்துள்ளதாக ''அறனும் அன்றே ஆக்கமும் தேய்ம்'' (நற்றிணை, பா.68: 3) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. எனவே, மேற்கண்ட நற்றிணைப் பாடல்களைக் கொண்டு அறம் எனும் சொல் சங்க காலத்தில் இயற்கை, நீதி ஆகியவற்றைக் குறிக்கவும் பயன்படுத்தப்பட்டமை உறுதியாகிறது.

மேலும், நோயாளியின் நோயினை அறிந்து அதற்கேற்றவாறு மருந்து கொடுக்கும் சிறந்த மருத்துவனை ‘அறவோன்’ எனச் சங்க கால மக்கள் அழைத்துள்ளதை அறியலாகிறது. அக்கால மக்களால் அறத் தொழிலாக மருத்துவமும், அறம் தவறாதவர்களாக மருத்துவர்களும் மதிக்கப்பட்டுள்ளனர். இதனை மெய்ப்பிக்கும் வகையில், ''மருந்து ஆய்ந்த கொடுத்த அறவோன்'' (நற்றிணை, பா.136: 3) எனும் நற்றிணைத் தொடர் விளங்குகிறது. மேலும், அக்கால மருத்துவர்கள் உயிர்காக்கும் அறக்கடவுளாக மக்களால் போற்றப்பட்டுள்ளதையும் உணர முடிகின்றது.

**அறம் சார்ந்த வாழ்க்கைத் தத்துவங்கள்**

சமூகத்தில் வாழும் ஒவ்வொரு மனிதனின் சொல், செயல், நடைமுறை ஆகிய அனைத்தையும் நுணுக்கமாக ஆராய்ந்தால் பல்வேறு கருத்துகளும், அறிவுரைகளும், தத்துவங்களும் பொதிந்துள்ளதைக் காணலாம். செயல்கள் குறித்த அறக்கருத்துகளை அறிவுரைகளாவும், அவற்றின் இன்றியமையாமையைத் தத்துவங்களாகவும் நற்றிணைப் பாடல்களில் புலவர்கள் குறிப்பிட்டுச் சென்றுள்ளனர்.

உலகில் உயிர்வாழும் உயிர்களுக்கு இன்றியமையாததாக விளங்கும் நீரின் முக்கியத்துவம் குறித்து ''நீரின் றமையா வுலகம்'' (நற்றிணை, பா. 1:5) என நற்றிணையின் முதல் பாடலில் மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. இதைப்போல, ஒரு மனிதனின் வாழும் காலம், வாழ்க்கை நிலை, வாழ்க்கை அமைப்பு, வாழ்வியல் சூழல் முதலிய வாழ்வியல் தொடர்பான நிகழ்வுகளை முன்பே அறிந்துகூற எந்த ஒரு அறிஞராலும் முடியாது என்பதை ''வாழ்நாள் வகையளவு அறிஞரும் இல்லை'' (நற்றிணை, பா.314: 2) எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது.

**இளமையின் இன்றியமையாமை**

பருவத்திலேயே பயிர் செய்தல் வேண்டும் என பழமொழிக்குத் தோற்றுவாயாகத் தொல்காப்பியத்தில் **"**நாளது சின்மையும் இளமையது அருமையும்'' (தொல், நூ.990:7) எனும் தொடர் இடம்பெற்றுள்ளதைக் காணலாம். இதுபோல, நற்றிணைப் பாடலில் ஆண், பெண் ஆகிய இருபால் மக்களின் இளமைப் பருவத்தினைத் திருமணத்துடன் தொடர்புபடுத்திப் பேசப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

> ''பொன்நேர் மேனி மணியன் தாழ்ந்த
> நல்நெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்''

(நற்றிணை, பா.10: 2-3)

எனத் திருமணத்தைத் தலைமுடிகள் நரைத்து வெண்மையாகி முதுமை அடைவதற்கு முன்பாக இளமையிலேயே செய்து கொள்ள வேண்டும் என இளமையின் அருமை அறிவுறுத்தப்பட்டுள்ளது. மற்றொரு பாடலில், ''முதிர்ந்தோர் இளமை ஒழிந்தும் எய்தார்'' (நற்றிணை, பா.314:1) என முதியோரால் மீண்டும் தனது இளமையைப் பெறமுடியாது என அழுத்தமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**தீமையைத் தவிர்த்தல்**

தீமை செய்தவருக்குச் சுட்டெரிக்கும் நரகம் உண்டு எனற கருத்தை அனைத்து சமயங்களும் வலியுறுத்துகின்றன. இத்தகைய கருத்தாடல் சங்க கால மக்களிடமும் வழக்கில் இருந்துள்ளது. இதனை, **''வரையா நயவினர் நிரையம் பேணார்'' (நற்றிணை, பா.329:1)** எனும் நற்றிணைப் பாடலடியால் அறியலாகிறது. இதனைக் கொண்டு நரக நெருப்பிற்கு அஞ்சி வரையறையின்றிப் பிறருக்குத் தீமை செய்வதைத் தவிர்க்குமாறு அக்கால மக்களுக்கு அறிவுரை புகட்டப்பட்டுள்ளது உறுதியாகிறது.

**விடாமுயற்சி**

ஒரு மனிதன் தான் எடுத்துக் கொண்ட செயலைச் செய்கையில் பல்வேறு இன்னல்கள், தடைகள் ஏற்படலாம். அவற்றைக் கண்டு அஞ்சி மனந்தளராமல் விடாமுயற்சியோடு முயன்று அச்செயலை முடித்துவிட வேண்டும். இதனை வலியுறுத்தும் வகையில் ,

> செய்வினை முடியாது எவ்வம் செய்தல்
> எய்யாமையொடு இளிவு தலைத் தருமென
> உறுதி தூக்காத் தூங்கி அறிவே (நற்றிணை, பா.284: 5-7)

என்ற நற்றிணைப் பாடல் அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. இதனைக் கொண்டு செயலில் ஈடுபடும் முன்னர் ஒருமுறைக்குப் பலமுறை சிந்திப்பது சிறந்தது. ஆனால் செயலில் இறங்கிய

பின்னர் அச்செயலை சிறப்பாக முடிப்பதை மட்டுமே சிந்தனையாகக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளதை அறியமுடிகின்றது.

**மனித நேயம்**

எந்தவொரு பலனையும் எதிர்பார்க்காமல் பிற உயிர்களிடம் காட்டப்படும் அன்புடன் கூடிய இரக்கக் குணத்தை 'மனிதநேயம்' அல்லது 'மனிதம்' எனக் கூறலாம். மனித நேயம் என்பதை "மனிதன் மனிதனை மதித்துச் செலுத்தும் அன்பு" (மணவழகன்.ஆ, பண்டையத் தமிழரின் தொலைநோக்குப் பார்வை, ப.14) என மணவழகன் குறிப்பிடுகிறார். ஆறு அழகப்பன் அவர்கள், "ஓர் ஆடையை நெய்கையில் நெடுக்கிழையும், குறுக்கிழையும் தறியால் பிணைப்பதைப் போன்று மக்களுடைய உள்ளங்களைப் பிணைத்து இணைப்புறச் செய்வதே மனிதநேயமாகும்" (அழகப்பன்.ஆறு, மனிதநேயம், ப.17) என மனிதநேயம் குறித்துத் தனது நூலில் பதிவுசெய்துள்ளார்.

ஆன்றோர் செல்நெறி வழாஅச்
சான்றோன் ஆதலநற்கு அறிந்தினை தெளிமே (நற்றிணை, ப.233: 8-9)

என்ற நற்றிணைப் பாடலில் மனிதத்தைத் தவம் செய்தோ, உடலை வருத்தியோ பெறமுடியாது என்றும், முன்னோர்களின் வழிகளைப் பேணிப் பின்பற்றி வாழ்ந்தாலே மனிதம் வளரும் என மனித நேயம் குறித்து விளக்கப்பட்டுள்ளதைக் காணலாகிறது.

ஆல நிழல் அசைவு நீங்கி
அஞ்சுவழி அஞ்சாது அசைவை அசைஇ
வருந்தாத ஏகுமதி வாழிலைக் குறுமகள் (நற்றிணை, பா.76: 3-5)

என்ற பாடலில் தன்னை நம்பி நெடுந்தொலைவு நடந்து வரும் தலைவி வருத்தம் அடையக் கூடாது என்ற தலைவனின் மனிதநேயப் பண்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது.

தன்னை இரவு நேரத்தில் சந்திக்க வருவதாகக் கூறிய தலைவனிடம் மறுப்புக்கூறும் தலைவியின் கூற்றாக அமைந்த நற்றிணைப் பாடலில் காதலோடு கூடிய மனிதநேயப் பண்பு வெளிப்படுவதாகப் புலவர் பதிவுசெய்துள்ளதைக் கான முடிகின்றது.

அஞ்சுதக உரறும் ஓசை கேளாது
துஞ்சு தியோ – இல தூவிலாட்டி
பேரஞர் பொருத புகர்படு நெஞ்சம்
நீரடு நெருப்பின் தணிய இன்றிவர்
வாரார் ஆயினோ நன்றே சாரல்
விலங்கு மலை ஆராறு உல்ளுதொறும்
நிலம்பரந்து ஒழுகுமென் நிறைஇல் நெஞ்சே (நற்றிணை, பா.154: 6-12)

என்ற பாடல் வாயிலாக இரவு நேரத்தில் தலைவன் பல்வேறு இடர்களைச் சந்திக்க நேரிடும் என்னும் உணர்வினால் தலைவி மறுப்புக் கூறியுள்ளதாகக் கொள்ள முடிகிறது. இவை அக்கால தலைவன் தலைவியின் மனிதநேயப் பண்புகளை வெளிப்படுத்துகின்றன.

**வாய்மை**

சிந்திக்கும் ஆற்றலைப் பெற்றுள்ள ஒவ்வொரு மனிதனும் சொல்லிய சொல்லையும், கொடுத்த வாக்கினையும் காக்கும் குணம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். இதனைச் சங்க கால மக்கள் காலங்காலமாகப் பின்பற்றி வந்துள்ளதை நற்றிணைப் பாடல்கள் வழியாக அறிய முடிகின்றது.

நிலம்புடை பெயர்வதாயினும் கூறிய
சொல்புடை பெயர்லோ இலரே (நற்றிணை, பா.289: 2-3)

என்பதில் இயற்கை சீற்றத்தால் நிலப்பகுதி பிரிந்து இரண்டாகப் பிளவுபட்டாலும், மக்கள் சொன்ன சொல்லில் இருந்து மாறுபடமாட்டார்கள் எனக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது

நின்ற சொல்லர் நீடுதோன்று இனியர்
என்றும் என்தோள் பிரிபு அறியலரே (நற்றிணை, பா.1: 1-2)

என்பதில் தன்னிடம் சொன்ன சொல்லுக்கு மாற்றமாகத் தலைவன் நடந்து கொள்ள மாட்டான் எனப் பிரிவுத் துயரால் வருந்தும் தலைவி மனவலிமையுடன் தோழிக்குக் கூறியுள்ளதைக் காண முடிகின்றது.

தண்பெரும் பரப்பின் ஒண்பதம் நோக்கி
அங்கண் அரில்வலை உணக்கும் துறைவனொடு (நற்றிணை, பா.4: 3-4)

என்ற பாடலிலும் தன்னிடம் சொல்லிய சொல்லில் இருந்து மாறுபடாமல் நடந்துகொண்ட தலைவன் குறித்து தலைவி கூறுவதாக அமைந்துள்ளது. "பொய் சொல்வதற்கு மனவலிமை தேவையில்லை. ஆனால் எதற்காகவும் பொய் சொல்லாமல் உண்மையே பேசி உண்மையாக நடப்பதற்கு மனவலிமை வேண்டும்" (வரதராசன்.மு, நல்வாழ்வு, ப.65) என்ற மு.வரதராசனின் கூற்றினைக் கொண்டு சங்க கால ஆண்களும் பெண்களும் வாய்மையை விழுமியமாகக் கடைபிடித்து வாழ்ந்துள்ளதை அறியலாகிறது.

**உணவுப் பங்கீடு (பாதீடு)**

'பாதீடு' என்னும் சொல்லானது 'பகிர்ந்து உண்ணுதல்', 'பங்கிட்டு உண்ணுதல்' ஆகியவற்றைக் குறிக்க சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்லாகும். பழந்தமிழரின் வாழ்வியலை விளக்கும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் உணவுப் பங்கிடுதல் குறித்து "தந்துநிறை பாதீடு உண்டாட்டு கொடையென" (தொல், நூ.1007:7) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. சங்க காலத்தில் பங்கிட்டு உண்ணுவதற்கு என இடம் இருந்ததை "கூட்டுண்ணும் புல்லென் மன்றம்" (நற்றிணை, பா.33:3) என நற்றிணையில் இடம்பெற்றுள்ள தொடரால் அறியலாகிறது.

"உடும்பு கொளீஇ வரிநுணல் அகழந்து
நெடுங் கோட்டுப் புற்றத்தீயல் கெண்டி
எல்லுமுயல் எறிந்த வேட்டுவன் கவல
பல்வேறு பண்டத் தொடை மறந்தில்லத்து
இருமடைக் கள்ளின் இன்களி செகுக்கும்" (நற்றிணை,பா.59: 1-5)

எனும் பாடலில் பாலை நில வேட்டுவன் தனது சுற்றத்தாருடன் பகிர்ந்து உண்ட உணவுப் பொருட்கள் பட்டியாலக் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காண முடிகிறது. அவ்வேட்டுவன் உடும்பு, தவளை, ஈயல் (ஈசல்), முயலை ஆகியவற்றின் மாமிசத் துண்டுகளைச் சுற்றத்தாருடன் பகிர்ந்து உண்டதாகக் கூறப்பட்டுள்ளது,

கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேம்கமழ் கதுப்பின் கொடிச்சி கிழங்கொடு
காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும் (நற்றிணை, பா.85: 8-10)

பிணர்ச்சுவற் பன்றிதோல் முலைப் பிணவொடு
கணைக்கால் ஏனல் கைம்மிகக் கவர்தலின்
கல்லதர் அரும்புழை அல்கி கானவன்
வில்லின் தந்த வெண்கோட்டு ஏற்றை
புனையிருங் கதுப்பின் மனையோள் கெண்டி
குடிமுறை பகுக்கும் நெடுமலை நாட (நற்றிணை, பா.336:1-6)

ஆகிய பாடல்களில் குறிஞ்சி நில மக்களின் உணவுப் பங்கீட்டு முறை குறித்து கூறப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. அம்பெய்தி கொல்லப்பட்ட முள்ளம் பன்றியை இல்லத்திற்குக் கொண்டு வந்து குறிஞ்சி நிலத் தலைவியிடம் தலைவன் கொடுக்க, அதனை நன்றாகச் சமைத்துத் தனது குடிகளுக்குப் பங்கிட்டுக் கொடுத்து உண்டு மகிழ்ந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்பாடல்களைக் கொண்டு சங்க கால மக்கள் பங்கிட்டு உண்ணுதலை விழுமியமாகக் கொண்டவர்களாக விளங்கியதை அறியமுடிகின்றது.

**முடிவுரை**

விழுமியம், அறம் அகிய சொற்கள் குறித்து கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், அறிஞர்களின் கூற்றுகள் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு விளக்கம் காணப்பட்டுள்ளது. மனிதனின் மனத்தில் இயற்கையிலேயே அறம் நிரம்பியுள்ளதையும், நோய்க்கு மருத்தளிக்கும் மருத்துவன் ‘அறவோன்’ என அழைக்கப்பட்டதையும் நற்றிணைப் பாடல்களால் அறிய முடிகின்றது. மேலும், நீரில்லாமல் உலகம் இயங்காது, வாழ்நாளை யாராலும் வரையறுத்துக் கூற முடியாது ஆகிய வாழ்க்கைத் தத்துவங்கள் அற விழுமியங்களாக நற்றிணையில் இடம்பெற்றுள்ளதைக் காண முடிகிறது. இளமையின் இன்றியமையாமை, தீமையைத் தவிர்த்தல், விடாமுயற்சி செய்தல் ஆகியன குறித்த விழுமியக் கருத்துகள் நற்றிணைப் புலவர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளன. சங்க காலத்தில் இருபால் மக்களிடமும் உண்மைப் பேசுதல், பங்கிட்டு உண்ணுதல், மனிதநேயம் முதலான பண்புகள் விழுமியங்களாக இருந்ததை நற்றிணைப் பாடல்கள் உறுதிசெய்கின்றன.

**துணைநின்ற நூல்கள்**


- அழகப்பன், ஆறு. (2012). மனிதநேயம். சென்னை: பத்மா பதிப்பகம்.
- இராமசுப்பிரமணியம், வ.த. (2001). திருமகள் தமிழ் அகராதி. சென்னை: திருமகள் நிலையம்.
- கழகப்புலவர் குழு. (1964). கழகத் தமிழ் அகராதி. சென்னை: கழக வெளியீடு.
- சேதுமணியன். (1990). தமிழ் நாவல்களில் மதிப்புகள். மதுரை: செண்பகம் வெளியீடு.
- பாலசுப்பிரமணியன், கு.வே. (2004). நற்றிணை மூலமும் உரையும். சென்னை: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிமிட்.
- பாலதண்டாயுதம், க. (2010). சங்க இலக்கியத்தில் அறங்கள். புதுச்சேரி: காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு மையம்.
- புலியூர்க் கேசிகன். (2003). தொல்காப்பியம் தெளிவுரையுடன். சென்னை: அருணா பப்ளிகேஷன்ஸ்.

- மணவழகன், ஆ. (2005). பண்டையத் தமிழரின் தொலைநோக்குப் பார்வை. சென்னை: காவ்யா பதிப்பகம்.
- வரதராசன், மு. (2000). நல்வாழ்வு. சென்னை: பாரி நிலையம்.
- தமிழ் லெக்சிகன் பகுதி-1. (1924). சென்னை: சென்னைப் பல்கலைக்கழகம்.